சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.109/2021

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ம் நாள் .வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | வயது | 72 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காட்டுர், மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஓய்வு பெற்ற ஆசிரியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

நான் தற்போது மேட்டுப்பாளையம் காட்டுரில் குடியிருக்கிறேன். சொந்த வீட்டில் தான் குடியிருக்கிறேன். நான் 28 வருடங்களாக அதே வீட்டில் தான் குடியிருக்கிறேன். அதற்கு முன்னர் மேட்டுப்பாளையத்தில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன். எத்தனை ஆண்டுகளாக மேட்டுப்பாளையத்தில் குடியிருந்தேன் என்றால் 35 ஆண்டுகளாக குடியிருந்தேன். 3-ம் பிரதிவாதி பொன்னுசாமி என்னுடைய சகோதரர் என்றால் சரி தான். அவர் வருவாய் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டார் என்றால் சரி தான். அவர் மேட்டுப்பாளையம் பங்களாமேட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரி தான். அவரும் மேட்டுப்பாளையத்தில் சுமார் 28 வருடங்களாக குடியிருந்து வந்தார். 4-ம் பிரதிவாதியான எனது தம்பி கந்தசாமி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் தொழில்நுட்ப ரீதியாக பணியாற்றி வந்தார். அவர் சுமார் 24 வருடங்களாக காரமடையில் குடியிருந்து வருகிறார். எனது சகோதரர்களான 1ம் பிரதிவாதி செல்வராஜ், 2-ம் பிரதிவாதி துரைசாமி, ஆகியோர்கள் தாவா சொத்து அமைந்துள்ள கெண்டேபாளையத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரி தான். நான் 35 வருடங்களுக்கு முன்னரே கெண்டேபாளையத்தில் இருந்து குடிபெயர்ந்து

மேட்டுப்பாளையத்திற்கு வந்து விட்டேன் என்றால் வேலை நிமித்தமாக மேட்டுப்பாளையம் வந்தேன். 35 வருடங்களாக என்னுடைய வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்ட ஆவணங்கள் மேட்டுப்பாளையம் முகவரியில் தான் உள்ளது என்றால் சரி தான். நான் 35 வருடங்களுக்கு முன்னரே நான் மேட்டுப்பாளையத்திற்கு குடிமாறி வந்து விட்டேன் என்றும் தற்போது வேலை நிமித்தம் மாறி வந்து விட்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. தாவா சொத்து அமைந்துள்ள பகுதி வறட்சியான வானம் பார்த்த பூமி என்றால் பாதி வானம் பார்த்த பூமி, பாதி விவசாய நிலம் ஆகும். பிராது 1 முதல் 3 இலக்க சொத்துக்களுக்கு 1ம் பிரதிவாதி பெயரில் அரசு பட்டா வழங்கி உள்ளது என்றால் சரி தான். தமிழ்நாடு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் தான் அந்த பட்டா வாதிக்கு வழங்கப்பட்டது என்றால் சரி தான். தாவா சொத்துக்கள் அனைத்தும் 1987-ம் ஆண்டுக்கு முன்னர் நத்தம் நிலமாக தான் இருந்தது என்றால் சரி தான். பிராது 1 முதல் 3 இலக்க சொத்தின் சுவாதீனத்தில் எனது அண்ணனான 1ம் பிரதிவாதி இருந்ததால் தான் அவர் பெயருக்கு நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரி யல்ல. அது பூர்வீக சொத்து ஆகும். பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் பூர்வீக சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். பூர்வீக சொத்து என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றால் சரி யல்ல. பிராது 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்பதால் நான் அதில் எந்த பாகமும் கோர முடியாது என்றால் சரி யல்ல. பிராது 5 -ம் இலக்க சொத்தை 1986-ல் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரி தான். அந்த சொத்தை 04.09.2020 அன்று தனது மகளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரி தான். பிராது 5-ம் இலக்க சொத்தானது எனது அண்ணனான 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி யல்ல. அது கூட்டுக் குடும்ப சொத்து ஆகும். கூட்டுக் குடும்ப சொத்து என பொய்யாக கூறுகிறேன் என்றும் அந்த சொத்திலும் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரி யல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.